# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2013 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டம்*

---

*(2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 07 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2013, ஓகத்து மாதம் 08 ஆம் திகதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 23.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

**2013 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க,**
**இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டம்**

[2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 07 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச. வ. ஓ. 21/2009

**2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2013 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இலங்கை மின்சாரச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

> "(1) (இதனகத்துப்பின்னர் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கைப் பொதுப்பயன் பாடுகள் ஆணைக்குழு இச்சட்டத்தால் அல்லது அதன்கீழ் ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்டவாறான அல்லது குறித்தொதுக்கப்பட்டவாறான எல்லாத் தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் பிரயோகித்தலும் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 2அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 2அ என்னும் பிரிவு என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும்.

*"ஆணைக் குழுவின் தத்து வங்களையும் கடமைகளையும் பணிகளையும் கையளித்தல்.*

> 2அ. (1) (அ) ஆணைக்குழு இச்சட்டத்தால் அல்லது அதன்கீழ் அதற்கு உரித்தாக்கப்பட்ட அல் லது குறித்தொதுக்கப்பட்ட அதன் எவையேனும் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறான குறித்த நோக்கத்திற்காகவும் காலப்பகுதிக்காகவும் ஆணைக்குழுவின் எவரேனும் அலுவலருக்கு, கையளிக்கலாம்.

(ஆ) ஆணைக்குழு எவரேனும் பிரதேச செயலாளருக்கு சட்டத்தின் I ஆம் அட்டவணையின் 3, 4, 5 மற்றும் 6 ஆம் விடயங்களின் மூலம் அளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தைக் கையளிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணி எந்த அலுவலருக்குக் கையளிக்கப்படுகின்றதோ அந்த அலுவலர் அத்தகைய தத்துவத்தை, கடமையை அல்லது பணியை ஆணைக்குழுவால் அத்தகைய அலுவலருக்கு வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய பணிப்புகளுக்கமைய பிரயோகித்தல், நிறைவேற்றுதல் அல்லது புரிதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் கையளிப்பு எவ்வாறிருப்பினும் ஆணைக்குழு அவ்வாறு கையளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிப்பதற்கான, நிறைவேற்றுவதற்கான அல்லது புரிவதற்கான அதிகாரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.''.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு ''ஆயினும் அத்தகைய ஆள்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''ஆயினும் அத்தகைய ஆள், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்டவொரு கம்பெனியாகவிருக்குமிடத்து, அத்தகைய ஆள்'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலமும் :-

''(1அ) ஓராம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் அப்பந்தியில் குறித்துரைக்கப்பட்ட தகவுடைமைத் தேவைப்பாடு இச்சட்டம்

வலுவுக்கு வரும் தேதியன்று இலங்கை மின்சார சபையுடன் நிறைவேற்றப்பட்ட செல்லுபடியான மின்வலுக் கொள்வனவு உடன்படிக்கையொன்றைக் கொண்டுள்ளதும் இச்சட்டம் வலுவுக்குவரும் தேதிக்கு முந்திய நாளன்று தொழிற்படுவதும் 25 மெ.வா. பிறப்பாக்கக் கொள்ளளவுக்கு மேற்பட்ட மின்சாரத்தைப் பிறப்பாக்கம் செய்வதற்கான பொறியொன்றைத் தொழிற்படுத்துவதுமான கம்பெனியொன்றுக்கு ஏற்புடையனவாதலாகாது :

ஆயினும், இவ்வுட்பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்டவாறான கம்பெனியொன்று தொடர்பில் தகவுடைமைத் தேவைப்பாடுகளின் ஏற்புடைத்தகைமை அவ்வுட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட மின்வலுக் கொள்வனவு உடன்படிக்கையின் காலவரையறையின்போது மாத்திரமே நடைமுறையிலிருத்தல் வேண்டும்.''; அத்துடன்

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் ''அரசாங்கம் அதன் பங்குகளில் ஐம்பது வீதத்திற்குமேல்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''அரசாங்கம் அல்லது ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனம் அதன் பங்குகளில் ஐம்பது வீதத்திற்கு மேல்'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் பிரிவு உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 9அ என்னும் பிரிவு என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும் :- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 9அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

*''நியதிச்சட்ட விலக்களிப்புகள்.* 9அ. (1) ஆணைக்குழு -

(அ) மின்பிறப்பாக்கத்திற்குக் கையாளப்படும் செயல்முறையையும் ;

(ஆ) பிறப்பாக்கம் செய்ய உத்தேசிக்கப்படும் மின்சாரத்தின் தொகையையும் ;

(இ) பிறப்பாக்கம் செய்யப்பட்ட மின்சாரம் எந்த ஆட்களிடையே விநியோகிக்கப்படவுள்ளதோ அந்த ஆட்களின் எண்ணிக்கையையும் ;

(ஈ) மின்சாரப் பிறப்பாக்கத்திற்கு பயன்படுத்தப்படவுள்ள பொறியின் அமைவிடத்தையும் ; அத்துடன்

(உ) தோதானதென ஆணைக்குழு கருதக் கூடிய வேறு எவையேனும் மூலப்பிரமாணங்களையும்,

கருத்திற்கொண்டு எவரேனும் ஆள் அல்லது வகுதியினரான ஆட்கள் வர்த்தகரீதியற்றதன் மீதான சமூக அடிப்படையில் மின்சாரத்தைப் பிறப்பாக்கம் செய்யும் கருத்திட்டத்தில் ஈடுபடுத்துமிடத்து, வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையின்மூலம் மின்சாரப் பிறப்பாக்கத்திற்கான அல்லது விநியோகத்திற்கான உரிமமொன்றைப் பெறும் தேவைப்பாட்டிலிருந்து அத்தகைய ஆளுக்கு அல்லது வகுதியினரான ஆட்களுக்கு விலக்களிக்கலாம்.

(2) அத்தகைய விலக்களிப்பு எந்தக் காலப் பகுதிக்கு வழங்கப்படுகின்றதோ அந்தக் காலப் பகுதியும் மற்றும் அத்தகைய விலக்களிப்பு எந்த நியதி நிபந்தனைகளுக்கு அமைந்தனவாதல் வேண்டுமோ அந்த நியதி நிபந்தனைகளும் அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட்டவாறிருத்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழு (1) ஆம் உட்பிரிவின் கீழ் எவரேனும் ஆளுக்கு அல்லது வகுதியினரான ஆட்களுக்கு வழங்கப்பட்ட விலக்களிப்பொன்றை, அத்தகைய ஆள் அல்லது வகுதியினரான ஆட்கள்–

(அ) எந்த நியதி நிபந்தனைக்கமைய அத்தகைய விலக்களிப்பு வழங்கப்பட்

டதோ அந்த எவையேனும் நியதி நிபந்தனைகளுக்கு முரணாக செயற்பட்டுள்ளவிடத்து ; அல்லது

(ஆ) வர்த்தக அடிப்படையொன்றின்மீது மின்சாரத்தைப் பிறப்பாக்கம் செய்ய அல்லது விநியோகிக்கத் தொடங்குமிடத்து,

கைமீட்கலாம்.

(4) இப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்பொன்று கைமீட்கப்படுமிடத்து ஆணைக்குழு தோதானதென அது கருதுகின்றவாறான அத்தகைய முறையில் வெளியிடப்படும் அறிவித்தலின் மூலம் எந்த ஆளின் அல்லது வகுதியினரான ஆட்களின் விலக்களிப்பு கைமீட்கப்படுகின்றதோ அந்த ஆளின் அல்லது வகுதியினரான ஆட்களின் பெயர்களை வெளிவிடுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய மீளப்பெறுதலினால் பாதிக்கப்படும் ஆட்களுக்கு அறிவித்தலும் வேண்டும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் ''வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம்,'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''அந்நோக்கத்திற்கென செய்யப்படும் விண்ணப்பத்தின்மீது,'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :-

''(2) ஆணைக்குழுவானது, ஒராம் உட்பிரிவின்கீழ் எந்த ஆளுக்கு அல்லது வகுதியினரான ஆட்களுக்கு விலக்களிக்கப்படுகின்றதோ அந்த ஆள் அல்லது வகுதி

யினரான ஆட்கள் ஒவ்வொருவருக்கும் விலக்களிப்புச் சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும். இது அதன்கண் குறித்துரைக்கப்படவேண்டியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கு அமைவானதாகவும் அத்தகைய காலப்பகுதிக்குப் பயனுறுதியுடையதாகவு மிருத்தலும் வேண்டும்.'';

(3) அப்பிரிவின் முடிவில் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலமும் :-

''(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் எவரேனும் ஆளுக்கு அல்லது ஏதேனும் வகுதியினரான ஆட்களுக்கு விலக்களிப்புச் சான்றிதழொன்று வழங்கப்பட்ட ஒரு வாரத்திற்குள் விடயத்திற்கேற்ப எந்த ஆளுக்கு அல்லது வகுதியினரான ஆட்களுக்கு விலக்களிப்புச் சான்றிதழொன்று வழங்கப்பட்டதோ அத்தகைய எல்லா ஆட்களினதும் அல்லது வகுதியினரான ஆட்களினதும் பெயர்களை வர்த்தமானியில் அறிவித்தலொன்றின் மூலம் வெளியிடுவது ஆணைக்குழுவின் கடமையாதல் வேண்டும் :

ஆயினும், விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் மேலே தேவைப்படுத்தப்பட்டவாறு வர்த்தமானியில் அறிவித்தல் எதுவும் வெளியிடப்படாவிடில் (2) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்புச் சான்றிதழ் வெற்றும் வறிதுமாதலும் வேண்டுமென்பதுடன் சட்டத்தில் வலுவும் பயனுமற்றதுமாதலும் வேண்டும்.'';

(4) அப்பிரிவின் ஓரக்குறிப்பிற்குப் பதிலாகப் பின்வரும் ஓரக்குறிப்பை இடுவதன்மூலமும் :-

''விண்ணப்பத்தின்மீது
வழங்கப்பட்ட
விலக்களிப்பு.''.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**8.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவு அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

''(ஆஆ) ஏதேனும் கூட்டாட்சி ஆதனத்தின் அல்லது பகுதியளவுக் கூட்டாட்சி ஆதனத்தின் கூட்டாட்சி ஆதனப் பாகங்களின் சொந்தக்காரர்களுக்கு அத்தகைய உரிமம்

பெறுநர் மின்சாரத்தை விநியோகிக்க விளையுமிடத்து, அத்தகைய சொந்தக்காரர்களுக்கு மின்சாரத்தின் விநியோகத்திற்கென 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, இருப்பிடக்கூறு சொத்தாண்மைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட விடயத்திற்கேற்ப, அத்தகைய கூட்டாட்சி ஆதனத்தின் அல்லது பகுதியளவு கூட்டாட்சி ஆதனத்தின் முகாமைத்துவக் கூட்டுத்தாபனம் மின்சாரத்தின் நுகர்வுக்கு அத்தகைய எல்லாச் சொந்தக்காரர்களிடமிருந்தும் சேவைக் கட்டணங்களையும் மாதாந்தக் கட்டணங்களையும் அறிவிடுவதற்கு அத்தகைய முகாமைத்துக் கூட்டுத்தாபனத்திற்கு அதிகாரமளித்து அத்தகைய முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்துடன் உடன்படிக்கையொன்றைச் செய்துகொள்ளுமாறு உரிமம்பெறுநரைத் தேவைப்படுத்துதல் ;

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவினை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(1) உரிமமொன்று குறித்தொதுக்குவதற்கு அதிகாரம் அளிக்கின்ற நிபந்தனையொன்றை உள்ளடக்கினால் ஒன்றில் முழுமையாக அல்லது பகுதியளவில் அவ்வாறு அது குறித்தொதுக்கப்படக்கூடியதாதல் வேண்டும்.";

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின் வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(3அ) அமைச்சரானவர், ஆணைக்குழு (3) ஆம் உட்பிரிவால் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகியுள்ளதெனவும் மற்றும் அத்தகைய கருதப்பட்ட குறித்தொதுக்கல் இப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறவில்லை எனத் திருப்தியுறுமிடத்து, அத்தகைய குறித்தொதுக்கலுக்கு அவரது சம்மதத்தை வழங்குதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**10**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ''பத்தாம் பிரிவின்கீழ்'' மற்றும் ''10 ஆம் பிரிவின்கீழ்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக ''9அ மற்றும் 10 ஆம் பிரிவுகளின்கீழ், என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும் ;

(2) அப்பிரிவின் முடிவில் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலமும் :-

''(3) ஆணைக்குழு வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவித்தலின்மூலம் எந்த ஆட்களின் அல்லது வகுதியினரான ஆட்களின் விலக்களிப்பு (அ) என்னும் பந்தியின்கீழ் இல்லாதொழிக்கப்படுகின்றதோ அந்த ஆட்களின் அல்லது வகுதியினரான ஆட்களின் பெயர்களை அல்லது இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் கைமீட்கப்பட்டதோ அந்த ஏதேனும் வகுதியினரான ஆட்களிடையேயிருந்து எந்த ஆளின் வகுதியினரான ஆட்களின் பெயர்களை வெளியிடுதல் வேண்டும்.''.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**11**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :-

''(1) இருபத்தைந்தாம் பிரிவின்கீழ் மின்சார இணைப்பொன்றைத் தேவைப்படுத்தும் எவரேனும் ஆளுக்கு மின்சாரத்தை இணைக்கும் மற்றும் வழங்கும் நோக்கத்திற்கு விநியோக உரிமம்பெறுநரால் ஏதேனும் மின்வழி

அல்லது மின்பொறித் தொகுதி வழங்கப்படுமிடத்து சம்பந்தப்பட்ட ஆளுக்கு மின்வழியை அல்லது மின் பொறித்தொகுதியை வழங்குவதில் அல்லது மின்சாரத் தைத் தொடுப்பதிலும் வழங்குவதிலும் நியாயமாக உறப்பட்ட எவையேனும் செலவுகள் அத்தகைய ஆளினால் விநியோக உரிமத்தின் நிபந்தனைகளால் அனுமதிக்கப்படுகின்றவாறான அத்தகைய அளவுக்கு ஈடுசெய்யப்பட வேண்டும் என உரிமம்பெறுநர் தேவைப் படுத்தலாம்." ; அத்துடன்

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(1அ). எவரேனும் ஆள் 25 ஆம் பிரிவின்கீழ் மின்சார வழங்கலைத் தேவைப்படுத்துகின்றவரும் ஆனால் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விநியோக உரிமம்பெறுநரால் உறப்பட்ட செலவுகளை ஈடுசெய்வதற்குப் போதிய வசதியில்லாதவராகவும் இருக்கின்றவிடத்து, அத்த கைய ஆள், அத்தகைய செலவுகளை மாதாந்த தவணைக் கொடுப்பனவுகளில் நியம இறுப்பனவு உடன்படிக்கை யின்படி இறுப்பனவு மற்றும் விநியோக உரிமம்பெறு நரால் விதிப்பனவு செய்யப்படும் வேறு எவையேனும் அறவீடுகளுடன் சேர்த்து அறவிடும் அடிப்படையில் சம்பந்தப்பட்ட வளவுகளுக்கு மின்சாரத்தை இணைக்கு மாறும் வழங்குமாறும் விநியோக உரிமம்பெறுநருக்கு வேண்டுகோள் விடுக்கலாம்.

(1ஆ). (1அ) என்னும் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப் பட்ட ஆள் உரிமம்பெறுநரால் உறப்பட்ட மொத்தச் செலவுகளை ஈடுசெய்வதற்குப் போதிய வசதிகளைக் கொண்டிருக்கவில்லையென விநியோக உரிமம்பெறுநர் திருப்தியுறுமிடத்து, சம்பந்தப்பட்ட வளவுகளுக்கு மின்வழியை அல்லது மின்பொறித் தொகுதியை அல்லது மின்சார இணைப்பையும் வழங்கலையும் வழங்குவதற்கு முன்னர் அத்தகைய வளவுகளுக்கு மின்வழி அல்லது மின்பொறித் தொகுதி அல்லது

மின்சார இணைப்பும் வழங்கலும் விநியோக உரிமம் வழங்குநரால் கவனிக்கப்படுவதற்கு முன்னர் அவரால் விநியோக வழங்குநருக்கு செலவுகள் ஈடுசெய்யப்படும்முறை தொடர்பில் விநியோக உரிமம்பெறுநருடன் உடன்படிக்கையொன்றைச் செய்துகொள்ளுமாறு அத்தகைய ஆள் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(1இ). (1ஆ) என்னும் உட்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு அத்தகைய உரிமம்பெறுநரால் உறப்பட்ட எவையேனும் செலவுகளை ஈடுசெய்வதற்கு ஆளொருவரிடம் போதியளவு வசதிகள் இல்லை எனத் திருப்தியுறும் நோக்கத்திற்கு விநியோக உரிமம்பெறுநரால் தேவைப்படுத்தப்பட்ட தகவல் விதித்துரைக்கப்பட வேண்டியவாறான அத்தகைய வழிகாட்டுநெறிகளை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.''.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 39 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப்பின்னர் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலம்

''(2அ) இரண்டாம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் பிணக்கை மத்தியஸ்தம்செய்து தீர்வுகாண்கையில் ஆணைக்குழு அவ்வாறு செய்வது உசிதமானது என அது கருதுமிடத்து தீர்த்துவைக்கும் நோக்கத்திற்காக அத்தகைய பிணக்கை ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட மூன்று ஆட்களைக்கொண்ட மத்தியஸ்தர்களின் குழாம் ஒன்றுக்கு ஆற்றுப்படுத்தலாமென்பதுடன் அத்தகைய குழாமின் தவிசாளராகப் பணியாற்ற இவர்களுள் ஒருவர் ஒன்றில் ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராகவோ அன்றேல் ஆணைக்குழுவின் பணியாட்டொகுதியின் உறுப்பினரொருவராகவோ அல்லது பகிரங்க அலுவலரொருவராக இருத்தல் வேண்டும். மத்தியஸ்தர்களின் குழாம் அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட பிணக்கைத் தீர்ப்பதற்குப் பிணக்கிற்கான திறத்தவர்களிடையே தீர்வொன்றைக் கொண்டுவருவதற்கும் மற்றும் ஆணைக்குழுவால் குறித்துரைக்கப்பட வேண்டியவாறான காலத்திற்குள் அதன் தீர்மானங்களை முடிவுறுத்துவதற்குமான சகல முயற்சிகளையும் மேற்கொள்ளுதல் வேண்டும்.''; அத்துடன்

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தின்கீழும் இச்சட்டத்தின்கீழும் ஆக்கப்படும் விதிகளில் என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''இச்சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவால் ஆக்கப்பட்ட விதிகளில்'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

*"புதிய பிறப்பாக்கப் பொறித் தொகுதியை வழங்குதல் அல்லது ஏலவேயுள்ள ஏதேனும் பொறித் தொகுதியை விசாலித்தல்.*

43. (1) இச்சட்டத்தின் 8 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, இப்பிரிவின்கீழ் ஆணைக்குழுவால் அதிகாரமளிக்கப்பட்ட முறையில் தவிர, ஆளெவரும் ஏதேனும் புதிய பிறப்பாக்கப் பொறித் தொகுதியைப் பெறுதலோ அல்லது தொழிற்படுத்துதலோ அல்லது ஏலவேயுள்ள பொறித் தொகுதியின் பிறப்பாக்கற் கொள்ளளவை விசாலித்தலோ ஆகாது.

(2) கடத்துகை உரிமம்பெறுநர் ஒருவர் அத்தகைய உரிமம்பெறுநரால் தயாரிக்கப்பட்ட ஆகக்குறைந்த செலவிலான நீண்டகாலப் பிறப்பாக்கல் விசாலிப்புத் திட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு வருங்காலத் தேவைபற்றிய எதிர்வுகூறலின் அடிப்படையில் விநியோகம் மற்றும் பிறப்பாக்கல் உரிமம்பெறுநர்களின் சமர்ப்பணங்கள் கருத்திற் கொள்ளப்பட்டு ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர், திருத்தப்பட்டவாறு புதிய பிறப்பாக்கப் பொறித்தொகுதியைப் பெறுவதற்கான அல்லது ஏலவேயுள்ள பொறித்தொகுதியொன்றின் பிறப்பாக்கற் கொள்ளளவை விசாலிப்பதற்கான முன்மொழிவுகளை ஆணைக்குழுவின் எழுத்திலான அங்கீகாரத்திற்கென அதற்குச் சமர்ப்பித்தல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், இச்சட்டம் வலுவுக்கு வரும் தேதிக்கு முற்போந்த நாளன்று -

(அ) புதிய பிறப்பாக்கப் பொறித்தொகுதியொன்றை அபிவிருத்தி செய்வதற்கு அல்லது ஏலவேயுள்ள பிறப்பாக்கப் பொறித்தொகுதியொன்றின் பிறப்பாக்கற் கொள்ளளவை விசாலிப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரமொன்று பெறப்பட்டிருந்தவிடத்து ; அல்லது

(ஆ) 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையால் அச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின்கீழ் புதுப்பிக்கத்தகு மின்வலு வளங்கள் ஊடாக மின்சாரத்தைப் பிறப்பாக்கம் செய்வதற்கு அனுமதிப் பத்திரமொன்று வழங்கப்பட்டு அதன் விளைவாக புதிய பிறப்பாக்கப் பொறித்தொகுதியொன்றின் அபிவிருத்தி அல்லது ஏலவேயுள்ள பிறப்பாக்கப் பொறித்தொகுதியொன்றின் பிறப்பாக்கற் கொள்ளளவின் விசாலிப்பு அவசியமாக வந்திருக்கின்றவிடத்து,

விடயத்திற்கேற்ப, பெறப்பட்ட அங்கீகாரம் அல்லது வழங்கப்பட்ட அனுமதி அதன் அங்கீகாரத்திற்கென ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டும். ஆணைக்குழு செய்யப்பட்ட வேண்டுகோளை அதனுடன் இணைக்கப்பட்ட எவையேனும் ஆதார ஆவணங்களுடன் சேர்த்துக் கருத்திற்கொண்டு, இச்சட்டம் வலுவுக்கு வருவதற்கு முன்னர் விடயத்திற்கேற்ப அவசியமான அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது அல்லது நிலைபேறான மின்சக்தி அதிகாரசபையால்

அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது எனத் திருப்திப்படுவதன்மீது விடயத்திற்கேற்ப, புதிய பிறப்பாக்கப் பொறித்தொகுதியைப் பெறுவதற்கு அல்லது ஏலவேயுள்ள அதன் பொறித்தொகுதியின் பிறப்பாக்கற் கொள்ளளவை விசாலிப்பதற்கு அங்கீகாரத்தை வழங்குதல் வேண்டும்.

(3) கொள்ளளவில் 25 மெ.வா இற்குக் குறைவான மின்சாரத்தைப் பிறப்பாக்கம் செய்வதற்கு இச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின்கீழ் உரிமமொன்று வழங்கப்பட்டுள்ள ஆளொருவர், அதன் விளைவாக மின்சாரத்தின் பிறப்பாக்கம் கொள்ளளவில் 25 மெ.வா. ஐ விஞ்சுவதாக விருக்கும் அதன் பிறப்பாக்கக் கொள்ளளவை விசாலிப்பதற்கு முன்மொழியுமிடத்து அத்தகைய முன்மொழிவுக்காக (1) ஆம் உட்பிரிவின்கீழான ஆணைக்குழுவின் அங்கீகாரம் அத்தகைய ஆள் பிறப்பிக்க உரிமமொன்று வழங்கப்படுவதற்கு இச்சட்டத்தின் 9 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் தகைமை கொண்டுள்ள ஆளொருவராக இருந்தாலொழிய அளிக்கப்படுதலாகாது.

(4) இரண்டாம் உட்பிரிவின்கீழ் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டதன்மீது கடத்துகை உரிமம் பெறுநர் அதன் கடத்துகை உரிமத்தின் நிபந்தனைகளுக்கிணங்கவும் பெறுகை தொடர்பில் ஆணைக்குழுவால் ஆக்கப்படக்கூடியவாறான எவையேனும் விதிகளுடன் இணங்கியொழுகும் வகையிலும், விடயத்திற்கேற்ப அறிவித்தலில் குறித்துரைக்கப்படவேண்டியவாறு புதிய பிறப்பாக்கப் பொறித்தொகுதியொன்றை அபிவிருத்தி செய்வதற்கு அல்லது ஏலவேயுள்ள பிறப்பாக்கம் பொறித்தொகுதியின் பிறப்பாக்கற் கொள்ளளவை விசாலிப்பதற்கு வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவித்தலின்மூலம் கேள்விப்பத்திரங்களைக் கோருதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், இப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இவ்வுட்பிரிவின் கீழ் அறிவித்தலொன்று வெளியிடப்படுவதன்மீது கேள்விப்பத்திரமொன்றை சமர்ப்பிக்கும் தேவைப்பாடு ஏதேனும் புதிய பிறப்பாக்கப் பொறித்தொகுதி தொடர்பில் அல்லது அபிவிருத்தி செய்யப்படும் ஏலவேயுள்ள ஏதேனும் பிறப்பாக்கப் பொறித்தொகுதியின் விசாலிப்பு தொடர்பில் பின்வரும் விடயங்களில் ஏற்புடைத்தாதலாகாது :-

(அ) ஆணைக்குழுவால் முறையாக அங்கீகரிக்கப்பட்டதும் இச்சட்டம் வலுவுக்கு வரும் தேதிக்கு முற்போந்த நாளன்று அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளதும் ஆகக்குறைந்த செலவில் தொழிற்படுத்தப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டதுமான ஆகக் குறைந்த செலவிலான நீண்டகாலப் பிறப்பாக்க விசாலிப்புத் திட்டத்திற் கிணக்கமான புதிய பிறப்பாக்கத் தொகுதிக்கு அல்லது விசாலிப்பிற்கு ;

(ஆ) 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையால் அச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின்கீழ் புதுப்பிக்கத்தகு வலு மூல வளங்கள் ஊடாக மின்சாரத்தைப் பிறப் பாக்கம் செய்வதற்கு அனுமதிப் பத்திர மொன்று வழங்கப்பட்டிருந்தவிடத்தும் அத்துடன் தரப்படுத்தப்பட்ட இறுப்பன வில் தொழிற்படுத்தப்படுவதற்கென தேவைப்படுத்தப்பட்டதும் அமைச்சர வையால் அங்கீகரிக்கபபட்ட தரப்படுத் தப்பட்ட மின்வலுக் கொள்வனவு உடன் படிக்கையொன்றினால் நெறிப்படுத் தப்படுவதுமான அனுமதிப்பத்திர மொன்றின்மீதான புதிய பிறப்பாக்கத் தொகுதிக்கு அல்லது விசாலிப்பிற்கு ; அல்லது

(இ) ஆணைக்குழுவின் முன்னங்கீகாரத் தைப்பெற்று ஆணைக்குழுவால் முறை யாக அங்கீகரிக்கப்பட்ட ஆகக் குறைந்த செலவிலான நீண்டகாலப் பிறப்பாக்க விசாலிப்புத் திட்டத்துடன் இணங்கி யொழுகுகின்றவாறான எந்த விசாலிப் புத் திட்டம்-

(i) அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதோ அந்த விசாலிப்புத் திட்டத்திற்கென இலங்கை அரசாங்கத்திற்கு வெளிநாட்டு இறைமைகொண்ட அரசாங்கத்திடமிருந்து பெறப் பட்ட கொடை முனைவொன்றின் அடிப்படையிலானதோ ; அல்லது

(ii) அமைச்சரவையால் தீர்மானிக் கப்பட்டவாறு ஏதேனும் அவசர கால நிலைமையை சமாளிப் பதற்கெனத் தேசிய அனர்த்த மொன்றின்போது அல்லது பாரிய பிறப்பாக்கப் பொறித் தொகுதியொன்றின் வற்புறுத் துதல் செய்யப்பட்ட நீண்ட தவணை செயலிழப்பொன்றின் போது, காலங்கடத்தப்பட்ட விலைமனு கோரும் முறைவழி யானது வாய்ப்புள்ள நன்மை களைக் குறைக்குமிடத்து அல் லது அவரசகால கொள்ளள வைப் பெறுதலானது ஆகக் குறைந்த செலவில் எவரேனும் ஆளினால் வழங்கப்பட வேண்டு மெனத் தேவைப்படுத்தப்படும் அடிப்படையிலானதோ,

அந்த புதிய பிறப்பாக்கத் தொகுதிக்கு அல்லது விசாலிப்பிற்கு.

(5) கேள்விப்பத்திரம் மூடப்பட்டதன் மீது கடத்துகை உரிமம் பெறுநர் முறையாக அமைத் துருவாக்கப்பட்ட கேள்விப்பத்திரச் சபையொன் றின் ஊடாக ஆணைக்குழுவுக்கு அதன் அங்கீகாரத் திற்கென –

(அ) கடத்துகை உரிமம்பெறுநரின் தொழில் நுட்ப மற்றும் பொருளாதார தனித்துவ மான வரையறையுடன் இணங்கியொழு கும் வகையில் (4) ஆம் உட்பிரிவின் கீழ் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட வாறு விடயத்திற்கேற்ப புதிய பிறப் பாக்கப் பொறித்தொகுதியை அபி விருத்தி செய்வதில் அல்லது ஏலவே யுள்ள பிறப்பாக்கப் பொறித்தொகுதியின் பிறப்பாக்கக் கொள்ளளவை விசாலிப் பதில் ;

(ஆ) மின்வலுவை விற்பனை செய்வதில் அல்லது ஆகக்குறைந்த செலவில் மின்சாரக் கொள்ளளவை பிறப்பாக்கம் செய்வதில் ; அத்துடன்

(இ) ஆணைக்குழுவால் முறையாக அங்கீகரிக் கப்பட்ட ஆகக்குறைந்த செலவிலான நீண்ட தவணைப் பிறப்பாக்க விசாலிப் புத் திட்டத்தின் தேவைப்பாடுகளை நிறைவுசெய்வதில்,

மிகச் சிறந்த ஆற்றல்கொண்டவரான ஆளை அத்தகைய கொள்வனவின் நியதி நிபந்தனைகளை விவரிக்கும் மின்வலுக் கொள்வனவு வரைவொன் றுடன் சேர்த்து விதப்புரை செய்தல் வேண்டும்.

(6) (அ) நாலாம் உட்பிரிவின் காப்புவாசகத் தின் (அ), (ஆ) அல்லது (இ) என்னும் பந்தியின்கீழ் எவரேனும் ஆளுக்கு வழங்

கப்பட்ட கேள்விப்பத்திரமொன்றைச் சமர்ப்பிப்பதிலிருந்து விலக்களிப்பொன்று ; அல்லது

(ஆ) இச்சட்டம் நடைமுறைக்குவரும் திகதியன்று வலுவிலிருக்கும் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ள ஆளொருவரால் ஆணைக்குழுவால் முறையாக அங்கீகரிக்கப்பட்ட ஆகக் குறைந்த செலவிலான நீண்டகாலப் பிறப்பாக்க விசாலிப்புத் திட்டதிற்கிணங்க புதிய பிறப்பாக்கத் தொகுதியொன்று அல்லது ஏலவேயுள்ள பிறப்பாக்கப் பொறித்தொகுதியொன்றின் விசாலிப்பு, அபிவிருத்தி செய்யப்படுவது,

எவ்வாறிருப்பினும், கடத்துகை உரிமம் பெறுநர் கடத்துகை உரிமம்பெறுநரின் தொழில்நுட்ப மற்றும் பொருளாதாரத் தனித்துவ வரையறையுடன் இணங்கியொழுகும் வகையில் அத்தகைய ஆள், விடயத்திற்கேற்ப புதிய பிறப்பாக்கப் பொறித்தொகுதியொன்றை அபிவிருத்தி செய்வதில் அல்லது ஏலவேயுள்ள பிறப்பாக்கப் பொறித் தொகுதியொன்றின் பிறப்பாக்கக் கொள்ளளவை விசாலிப்பதில் ஆற்றலுடையவர் எனவும் மற்றும் ஆகக் குறைந்த செலவில் மின்வலுவை விற்பனை செய்வதில் அல்லது மின்சாரத்தின் கொள்ளளவை பிறப்பாக்கம் செய்வதில் ஆற்றலுடையவர் எனவும் தன்னைத் திருப்திப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட ஆளுடன் இணக்கப் பேச்சுவார்த்தை நடத்துமாறும் அதன் விதப்புரையை ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்கென விடயத்திற்கேற்ப அத்தகைய கொள்வனவின் நியதிநிபந்தனைகளை விவரிக்கும் மின்வலு கொள்வனவு உடன்படிக்கையின் வரைவுடன் அல்லது தரப்படுத்தப்பட்ட மின்வலுக் கொள்வனவு உடன்படிக்கையின் வரைவுடன் சேர்த்து அனுப்புதல் வேண்டும்.

(7) ஆணைக்குழுவானது, விடயத்திற்கேற்ப (5) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது (6) ஆம் உட்பிரிவின்கீழ் கடத்துகை உரிமம் பெறுநரின் எவையேனும் விதப்புரைகள் கிடைக்கப்பெற்றதன்மீது, மின்வலுவின் கொள்வனவுக்கு விதப்புரை செய்யப்பட்ட விலை அல்லது மின்சாரப் பிறப்பாக்கக் கொள்ளளவு ஆகக்குறைந்த செலவின் கோட்பாட்டையும் ஆகக்குறைந்த செலவிலான நீண்ட காலப் பிறப்பாக்க விசாலிப்புத் திட்டத்தின் தேவைப்பாடுகளையும் நிறைவு செய்கின்றது எனவும் அத்தகைய கொள்வனவின் நியதி நிபந்தனைகள் உரிமம்பெறுநரின் ஏற்றுக்கொள்ளப்பட்ட தனித்துவமான தொழில்நுட்ப மற்றும் பொருளாதார வரையறைக்குட்பட்டுள்ளன எனவும் அது திருப்திப்படுமிடத்து, வசதிப்படக்கூடிய விரைவில் அதன் அங்கீகாரத்தை வழங்குமாறு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(8) இப்பிரிவின் நோக்கத்திற்கு-

"ஆகக்குறைந்த செலவிலான நீண்டகாலப் பிறப்பாக்க விசாலிப்புத் திட்டம்" என்பது கடத்துகை உரிமம் பெறுநரால் தயாரிக்கப்பட்டு உரிமம் பெறுநர்களால் செய்யப்பட்ட சமர்ப்பணங்களின் அடிப்படையில் ஆணைக்குழுவால் திருத்தப்பட்டு அங்கீகரிக்கப்பட்டதும் ஆகக் குறைந்த பொருளாதார செலவின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்ட வருங்கால மின்சாரப் பிறப்பாக்கக் கொள்ளளவின் தேவைப்பாடுகளைச் சுட்டிக்காட்டி ஆணைக்குழுவால் வெளியிடப்பட்டதும் மற்றும் ஆணைக்குழுவால் முறையாக அங்கீகரிக்கப்பட்டு காலத்துக்குக்காலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கையின் மின்சார வலையமைப்பின் தொழினுட்ப மற்றும் நம்பகத்தன்மையின் தேவைப்பாடுகளை நிறைவுசெய்வதுமான ஒரு திட்டம் எனப் பொருள்படும் ; அத்துடன்

"தரப்படுத்தப்பட்ட மின்வலுக் கொள்வனவு உடன்படிக்கை" என்பது 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபைச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை யால் அச்சட்டத்தின் 18 ஆம் பிரி வின்கீழ் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரமொன்றின்கீழ் புதுப்பிக்கப் படற்பாலதான மின்சக்தி வழங் கலைப் பயன்படுத்தி பிறப்பாக்கம் செய்யப்பட்ட மின்சக்தியின் கொள் வனவுக்கு அல்லது மின்சாரப் பிறப் பாக்கற் கொள்ளளவுக்கு கடத்துகை உரிமம்பெறுநரால் செய்துகொள் ளப்பட்ட ஒரு உடன்படிக்கை எனப் பொருள்படும்.

**14**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 50 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :- முதன்மைச் சட்டவாக்கத்தின் 50 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் :-

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "துண்டிக்கின்ற ; அல்லது" என்னும் சொற் களுக்குப் பதிலாக, "துண்டிக்கின்ற;" என்னும் சொல்லை இடுவதன்மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "இணைக்கின்ற," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இணைக்கின்ற ; அல்லது" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(இ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட் புகுத்துவதன்மூலமும் :-

"(இ) கருத்தொன்றியதாக அல்லது கவனயீனமாக :-

(i) விநியோக உரிமம்பெறுநர் ஒருவரால் எவையேனும் வளவுகளுக்கு வழங்கப்

படும் மின்சாரத்தின் தொகையை அளப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஏதேனும் மானியின்மீது பதிவுசெய்யப் பட்டவாறான மின்சாரத்தின் தொகையை மாற்றுகின்ற ; அல்லது

(ii) அந்த மானியின் ஊடாக வழங்கப் படும் மின்சாரத்தின் தொகையை முறையாகப் பதிவுசெய்வதிலிருந்து ஏதேனும் மானியைத் தடுக்கின்ற,";

*(2)* அப்பிரிவின் *(1)* ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :-

"*(1அ)* எவரேனும் ஆளுக்கெதிராக *(1)* ஆம் உட் பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழ் தவறொன்றுக்கு வழக்குத் தொடரப்படுமிடத்து :-

(i) மானி, எந்த ஆளுக்கெதிராக வழக்குத் தொடரப் பட்டதோ அந்த ஆளின் கட்டுக்காப்பில் அல்லது கட்டுப்பாட்டின் கீழிலிருந்தது எனவும் ; அத்துடன்

(ii) அத்தகைய மானியின்மீது பதிவுசெய்யப்படும் மின்சாரத்தின் தொகையின் பதிவில் மாற்ற மொன்றை விளைவிக்கும் வகையில் மானியில் தலையீடு செய்யப்பட்டுள்ளது என்பதற்குத் தெளி வான எண்பிப்பு உள்ளதென்றும், ஆதலால் அத்தகைய பாவனையை முறையாகப் பதிவு செய்வதிலிருந்து மானி தடுக்கப்பட்டுள்ளதென் றும், பயன்படுமாறு விநியோக உரிமம்பெறு நரால் வழங்கப்பட்ட சான்றிதழொன்று சான்றில் ஏல்தகவாதல் வேண்டும் என்பதுடன், அதன்கண் அடங்கியுள்ள விடயங்களின் முதற்தோற்றள விலான எண்பிப்பாதலும் வேண்டும்."; அத்துடன்

(3) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின் வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலமும் :-

"(4அ) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழ் ஆளெவரும் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து, விநியோக உரிமம்பெறுநர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளின் வளவுகளுக்கு மின்சாரம் வழங்குதலை இடைநிறுத்தலாம் என்பதுடன், எந்த மானி தொடர்பில் தவறுபுரியப்பட்டதோ அந்த மானியையும் அப்புறப்படுத்தலாம். அதன்பின்னர் அதனைக் கையுதிர்ப்பதற்கு ஆணைக்குழு உரிமம்பெறுநருக்கு அதிகாரமளிக்கும் வரை அதனைப் பாதுகாப்பான கட்டுக்காப்பில் வைக்கலாம். ஆயினும், செலுத்தப்படாதிருக்கும் வருமதிகள் விநியோக உரிமம் பெறுநரால் அறவிடப்படும்பட்சத்தில், விநியோக உரிமம் பெறுநர் நியாயமானவொரு காலப்பகுதிக்குள் துண்டிக்கப்பட்ட மின்சாரத்தின் வழங்கலை மீளஅளித்தல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 57 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**15**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 57 ஆம் பிரிவு இத்தால் நீக்கம் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

"இணங்கியொழுகப்படுதலை அமைச்சர் உறுதிப்படுத்துதல்.

57. அமைச்சர் விடயத்திற்கேற்ப இச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவு, 20 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவு, 22 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவு அத்துடன் 38 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவு என்பவற்றின்கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறான ஒருப்பாட்டை அளிக்குகையில் விதித்துரைக்கப்படவேண்டியவாறான அத்தகைய கட்டளைகளுக்கிணங்க செயற்படுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 61 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**16**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 61 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) "மத்திய சூழல் அதிகாரசபை" என்ற சொற்றொடரின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும் :-

''இலங்கை மின்சாரசபை'' என்பது, 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கை மின்சார சபைச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கை மின்சார சபை எனப் பொருள்படும்;'';

(2) ''மின்பொறித்தொகுதி'' என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில் அவ்வரைவிலக்கணத்தின் (அ), (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளுக்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன்மூலமும் :-

''(அ) மின்வழியொன்று ; அல்லது

(ஆ) பாவனையாளரொருவரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள மின்துணைக்கருவியொன்று;'';

(3) ''உயர் வோற்றளவு வழிகள்'' என்னும் சொல்லமைப் பின் வரைவிலக்கணத்தில் ''33 கிலோவற்றுகளுக்கு மேலாக'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''33 கிலோ வோற்றுகளுக்குக் குறையாத'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(4) ''அறிவித்தல்'' என்ற சொல்லின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன்மூலமும் :-

''மின்வலுக் கொள்வனவு உடன்படிக்கை'' என்பது பிரத்தியேகமாக விநியோக உரிமம்பெறுநர் களுக்கு மின்சக்தியை விற்பனை செய்யும் நோக் கத்திற்கு தொகையளவிலான மின்சக்தியைக் கொள்வனவு செய்வதற்கு அல்லது தொகையள வில் மின்பிறப்பாக்கக் கொள்ளளவுக்கு கடத்துகை உரிமம்பெறுநர் ஒருவரால் பிறப்பாக்க உரிமம் பெறுநர் ஒருவருடன் செய்துகொள்ளப்படும் ஒரு உடன்படிக்கை எனப் பொருள்படும் ;

**17.** முதன்மைச் சட்டவாக்கத்திற்கான I ஆம் அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

முதன்மைச் சட்டவாக்கத் திற்கான I ஆம் அட்டவணையைத் திருத்துதல்.

(1) அந்த அட்டவணையின் விடயம் 3இல் -

(அ) அந்த விடயத்தின் பந்தி (3) என்பதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும் :-

"(3) பந்திகள் (1) அல்லது (2) ஏற்புடைத்தாகுமிடத்தும் அத்துடன் -

(அ) உரிமம்பெறுநர் வழி அனுமதியொன்றை அளிக்கப்பெறுவதற்கு நியாயமான எல்லா முயற்சிகளையும் எடுத்துள்ள விடத்தும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய முயற்சிகள் வெற்றியளிக்காத விடத்தும்,

விடயத்திற்கேற்ப எந்தக் காணியின்மீது வழி அனுமதி கோரப்படுகின்றதோ அந்தக் காணி அல்லது நிறுவப்பட்டுள்ள மின்வழியொன்று எந்தக் காணியிலிருந்து அப்புறப்படுத்தப்படவேண்டுமெனக் கோரப்படுகின்றதோ அந்தக் காணி அமைந்துள்ள நிர்வாக மாவட்டத்தின் பிரதேசச் செயலாளர் சம்பந்தப்பட்ட உரிமம் பெறுநரால் அதன் பொருட்டு விண்ணப்பமொன்று செய்யப்பட்டதிலிருந்து ஆறு வாரங்களுக்குள் ; அத்துடன்

(i) தம்பக்க வழக்கை எடுத்துரைக்கும் வாய்ப்பொன்றை சம்பந்தப்பட்ட காணிச் சொந்தக்காரருக்கு அல்லது இருப்பாட்சியாளருக்கு வழங்கியதன் பின்னர் விசாரணையொன்றை நடத்தியன் மீது ; அத்துடன்

(ii) உரிமம்பெறுநர் எந்தச் செயற்பாடுகளைக் கொண்டுநடாத்துவதற்கு அதன் உரிமத்தால் அதிகாரமளிக்கப்படுகின்றதோ அந்தச் செயற்பாடுகளைக் கொண்டு நடாத்துவதற்கு சம்பந்தப்பட்ட சொந்தக்காராரின் அல்லது இருப்பாட்சியாளரின் காணியில், அதன்கீழ் அல்லது அதன் மீது மின்வழியொன்றை நிறுவுவதற்கும் நிறுவிவைத்திருப்பதற்கும் உரிமம் பெறுநருக்கு அவசியமாகின்றது அல்லது உசிதமானது எனத் திருப்தியடைவதன்மீது,

ஒன்றில் நிபந்தனையின்றி அன்றேல் தோதானதென அத்தகைய பிரதேசச் செயலாளர் கருதுகின்றவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கும் விதப்புரைகளுக்கும் அமைய, விடயத்திற்கேற்ப பந்தி (1) அல்லது (2) என்பதில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளைக் கொண்டுநடாத்துவதற்கு அதிகாரமளிக்கலாம் அல்லது கொண்டுநடத்துவதிலிருந்து தடைசெய்யலாம்.

(3அ) விசாரணையொன்றின் முடிவில் உரிமம்பெறுநரின் உரிமத்தால் அதிகாரமளிக்கப்பட்ட செயற்பாடுகளைக் கொண்டுநடாத்தும் நோக்கத்திற்கு வழி அனுமதியைக் கொள்வது அவசியமாகியுள்ளது எனப் பிரதேசச் செயலாளர் திருப்திப்படுமிடத்து, பிரதேசச் செயலாளர் அதன்பொருட்டு உரிமம் பெறுநரால் விண்ணப்பமொன்று செய்யப்பட்டதிலிருந்து ஆறு வாரங்களுக்குள் அது தொடர்பிலான விதப்புரைகளை ஆணைக்குழுவுக்குச் செய்தல் வேண்டும்.

உரிமம் பெறுநர் உரிமத்தின் கீழ் கொண்டுநடாத்துவதற்கு அதிகார மளிக்கக்கப்பட்ட செயற்பாடுகளை கொண்டு நடாத்துவதற்கு சம்பந்தப்பட்ட காணியைக் கொள்வது அல்லது அதில், அதன் கீழ் அல்லது அதன் மேல் மின்வழியொன்றை நிறுவுவதும் நிறுவி வைத்திருத்தலும் அவசியமானது அல்லது உசிதமானது எனத் திருப்தி யடைவதன் மீது ஆணைக்குழுவானது அதன் கொள்ளுதலை அமைச்சருக்கு விதந்துரைத்தல் வேண்டும். அதன்மீது அமைச்சர் வர்த்தமானியில் வெளி யிடப்படும் கட்டளையால் கொள்ளலை அங்கீகரித்தல் வேண்டும் என்பதுடன், அதன்மீது வழியனுமதி பகிரங்க நோக்க மொன்றுக்கு தேவைப்படுத்தப்படுவ தாகக் கருதப்படுதல் வேண்டும் என் பதுடன் காணி கொள்ளல் சட்டத்தின்கீழ் கொள்ளப்படுதலும் மற்றும் உரிமம் பெறுநருக்கு கைமாற்றப்படுதலும் வேண்டும். அத்தகைய கொள்ளலுக்குச் செலுத்தப்படும் ஏதேனும் தொகை உரிமம் பெறுநரால் செலுத்தப்படுதல் வேண்டும்.''.

(ஆ) அந்த விடயத்தின் (5) ஆம் பந்தியை விட்டு விடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அந்த அட்டவணையின் 6 ஆம் விடயம் என்பதில் :-

(அ) அந்த விடயத்தின் (4) ஆம் பந்தியில் ''இருபத்தியொரு நாட்களினுள்'' என்னும் சொற்களுக்கும் மற்றும் ''செய்யலாம்'' என்னும் சொற்களுக்கும் பதிலாக, முறையே ''ஏழு வேலை நாட்களினுள்'' என்னும் சொற்களையும் மற்றும் ''செய்தல் வேண்டும்'' என்னும் சொற்களையும் இடுவதன்மூலம் ; அத்துடன்

(ஆ) அந்த விடயத்தின் (5) ஆம் பந்தியில், ''இருபத்தொரு நாட்களினுள்,'' என்னும் சொற்களுக்கும் மற்றும் ''ஆணைக்குழுவுக்கு'' என்னும் சொற்களுக்கும் பதிலாக, முறையே ''ஏழு வேலை நாட்களினுள்'' என்னும் சொற்களையும் மற்றும் ''முறையே ஆணைக்குழுவுக்கு அல்லது அந்நோக்கத்திற்கென ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட ஆளொருவருக்கு'' என்னும் சொற்களையும் இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்திற்கான II ஆம் அட்டவணையைத் திருத்துதல்.*

**18.** முதன்மைச் சட்டவாக்கத்திற்கான II ஆம் அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(அ) அவ்வட்டவணையின் 1 ஆம் விடயத்தின் (5) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாகப் பின்வருவதனை இடுக:-

''(5) இறுப்பு வாடிக்கையாளரொருவர் -

(அ) தேவைப்பட்ட காலப்பகுதியினுள் எவையேனும் வளவுகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டமை தொடர்பில் அல்லது அந்த வழங்கலின் நோக்கங்களுக்காக ஏதேனும் மின்சாரமானி, மின்வழி அல்லது மின்பொறித்தொகுதி ஏற்பாடு செய்யப்பட்டமை தொடர்பில் விநியோக உரிமம் பெறுநருக்கு வருமதியான எல்லா விதிப்பனவுகளையும் செலுத்தாதிருந்தால்; அல்லது

(ஆ) உரிமம் பெறுநரினால் வேறேவரேனும் பாவனையாளருக்கு மின்சாரம் வழங்குவதில் முறையற்ற வகையில் அல்லது தகாதவகையில் தலையிடுகின்ற ஏதேனும் துணைக்கருவியைப் பயன்படுத்தாதொழியும்படி அவரைத் தேவைப்படுத்துகின்ற உரிமம் பெறுநரிடமிருந்தான அறிவித்தலொன்றுக்கு இணங்கியொழுகத் தவறியிருந்தால் ; அல்லது

(இ) *சட்டத்தின் 27 ஆம் பிரிவின் (1ஆ) என்னும் உட்பிரிவின் கீழ் ஈடுபட்டுள்ள உடன் படிக்கையின்கீழான தேவைப்படுத்தப்பட்ட காலப்பகுதிக்காக முறையாக மாதத் தவணைக் கொடுப்பனவுகளைச் செலுத்து வதற்கு அல்லது விநியோக உரிமம் பெறுநருக்கு வாடிக்கையாளர் செய்வதற்கு இணங்கியுள்ள வேறு எவையேனும் விதிப் பனவுகளைச் செலுத்துவதற்கு தவறி யிருந்தால்,*

*விநியோக உரிமம் பெறுநர், தேவைப்பட்ட காலப் பகுதியின் முடிவில் உரிமம் பெறுநர் தகுதியென எண்ணுகின்றவாறான அத்தகைய வழிவகைகள் மூலம் அவ்வளவுகளுக்கான அல்லது வாடிக்கை யாளரினால் இருப்பாட்சி கொள்ளப்படும் வேறெவை யேனும் வளவுகளுக்கான வழங்கலைத் துண்டிக்க லாம் என்பதுடன், அவ்வாறு செய்வதில் உறப்படும் எவையேனும் செலவுகளை வாடிக்கையாளரிட மிருந்து அறவிடலாம்.''.*

(ஆ) *அவ்வட்டவணையின் 5 ஆம் விடயத்தின் (1) ஆம் பந்தியில் ''எட்டாம்'' என்னும் சொல்லிலிருந்து ''அதாவது -'' வரையான சொல்லை நீக்கிவிட்டு அதற் குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-*

*''ஒழுங்குவிதிகளின் மூலம் விதித்துரைக்கப்பட்ட வாறான விநியோக உரிமம் பெறுநரினால் அதிகாரமளிக்கப்படும் எவரேனும் அலுவலர், அட்டவணை* II *இன் 8(1) (அ) என்னும் விடயத்தில் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் பின்வரும் நோக்கங்களுள் எவற்றுக்காகவும், விநியோக உரிமம் பெறுநருக்குச் சொந்தமான அல்லது அவரினால் தொழிற்படுத்தப்படும் மின்வழிகள் மூலமும் மின்பொறித்தொகுதி மூலமும் விநியோக உரிமம் பெறுநரினால் எந்த*

*வளவுகளுக்கு மின்சார வழங்கல் கொடுக்கப் படுகின்றதோ மு.ப. 8 மணியிலிருந்து பி.ப. 5 மணிவரை எவையேனும் வளவுகளினுள் பிரவேசிக்கலாம் ; அதாவது -"*

(இ) அவ்வட்டவணையின் 6 ஆம் விடயத்தில் -

(i) *(1)* ஆம் பந்தியில் -

"இவ்வட்டவணையின்" என்னும் சொல்லிலிருந்து "பிரவேசிக்கலாம்" வரையிலான சொற்களையும் எண்களையும் நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

*"இவ்வட்டவணையின் 4(3) அல்லது 4(4) என்னும் பந்தியினால் அதிகாரமளிக்கப்படுமிடத்து, விநியோக உரிமம் பெறுநரினால் அதிகாரமளிக்கப்படும் எவரேனும் அலுவலர், வழங்கலைத் துண்டிக்கும் நோக்கத்துக்காக அல்லது மின்சாரத்தை விநியோகித்தல் அல்லது வழங்குதல் என்பவற்றுக்காக அல்லது அவற்றோடு சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் மானியை அல்லது ஏதேனும் இணைந்த மின்பொறித்தொகுதியை அகற்றும் நோக்கத்துக்காக மு.ப. 8 மணியிலிருந்து பி.ப. 5 மணிவரை அவ்வளவுகளினுட் பிரவேசிக்கலாம்."* ; அத்துடன்

(ii) *(2)* ஆம் பந்தியில் "விநியோக உரிமம் பெறுநரினால் அதிகாரமளிக்கப்படும்" என்னும் சொற்களிலிருந்து "பிரவேசிக்கலாம்." வரையான சொற்களை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரு வதனை இடுவதன் மூலமும் :-

*"விநியோக உரிமம் பெறுநரினால் அதிகாரமளிக்கப்படும் எவரேனும் அலுவலர், வழங்கலைத் துண்டிக்கும் அல்லது ஏதேனும் மின்பொறித்*

தொகுதியை, மின்வழியை அல்லது மின்மானியை அகற்றும் நோக்கத்துக்காக, மு.ப. 8 மணியிலிருந்து பி.ப. 5 மணிவரை அவ்வுளவுகளினுட் பிரவேசிக்கலாம்.'' ;

(ஈ) அவ்வட்டவணையின் 8 ஆம் விடயத்தில் (1) ஆம் பந்தியில் ''இச்சட்டத்தின்கீழ்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''II ஆம் அட்டவணையின் 5 ஆம் விடயம் மற்றும் 6 ஆம் விடயம் என்பவற்றின் ஏற்பாடுகளின் கீழன்றி இச்சட்டத்தின்கீழ்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்திற்கான III ஆம் அட்டவணையைத் திருத்துதல்.

**19**. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான III ஆம் அட்டவணை அவ்வட்டவணையின் 8 ஆம் விடயத்தை விட்டுவிடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**20**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

கடந்த காலத்தை உள்ளடக்கும் பயன்.

**21**. இச்சட்டத்தின் ஏற்பாடுகளினால் முதன்மைச் சட்டவாக்கத்திற்குச் செய்யப்பட்ட திருத்தங்கள் எல்லா நோக்கங்களுக்காகவும் 2009, ஏப்பிறல் 8 ஆம் திகதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்